# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 23/04/2022 | முதல் | 27/04/2022 |
| அறிக்கை எண் : | 032/ 2022 | வெளியீட்டு நாள் : | 22/04/2022 | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37° - 38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (19.04.2022 முதல் 21.04.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 27-04-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19/04 | 20/04 | 21/04 | | தேதி | நாள்-1 23/04 | நாள்-2 24/04 | நாள்-3 25/04 | நாள்-4 26/04 | நாள்-5 27/04 |
| 1.5 | 0.0 | 0.0 | | மழை (மி.மீ) | 3 | 6 | 2 | 0 | 0 |
| 38 | 38 | 37 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 34 | 34 | 35 | 35 |
| 26 | 27 | 27 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 24 | 24 | 24 | 24 |
| 5 | 3 | 6 | | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 3 | 3 |
| 62 | 76 | 83 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 44 | 55 | 54 | | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 4 | 5 | 5 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| தென் கிழக்குகு | கிழக்கு | தென் கிழக்கு | | **காற்றின் திசை** | தென்மே மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஏப்ரல் 23, 24 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 34°-35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## அடுத்த இரு வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (22 - 28 ஏப்ரல் 2022) :

### மழைப்பொழிவு :

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட குறைவான மழை பொழிய வாய்ப்பு.

**அதிகபட்ச வெப்பநிலை :**

அடுத்த நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த நாட்களுக்கு பொதுவா வாக இயல்பாக காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்கவாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 24.04.2022 தேதி தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுக்கானவாய்ப்பு உள்ளது. கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும். *கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.*

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**முக்கிய பயிர்கள் : மிளகாய், பப்பாளி, கால்நடை**

### மிளகாய்:

தற்போது நிலவும் வானிலையின் காரணமாக மிளகாய்ப் பயிரில் இலைப் பேன் தாக்குதல் தென்படுகின்றது. இதன் தாக்குதலால் இலைகளில் சுருக்கங்கள் ஏற்படும், இலைகள் மேல் நோக்கி சுருண்டு விடும், இலைக் காம்பு நீண்டு விடும், செடிகளின்; வளர்ச்சி குறைபடும், பூ மற்றும் காய்கள் உற்பத்தி தடைபடும், மொக்குகள் எளிதில் உதிர்ந்து விடும். இதன் தாக்குதலை குறைக்க அகத்தியை ஊடு பயிராக பயிரிடலாம். மிளகாய் நாற்றுகளின் மேற் பரப்பில் நீரைத் தெளித்து பேன்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம். மேலும் இதனைக்கட்டுப்படுத்த 10 லிட்டர்த ண்ணீருக்கு 3 மிலி. என்ற அளவில் இமிடாக்குலோபிரிட் என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை கலந்து தெளிக்கவும்.

### பப்பாளி:

தற்போது நிலவி வரும் பருவச்சூழ்நிலையில் பப்பாளி பழப் பயிரில் வெள்ளை ஈ தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வெள்ளை ஈதாக்குதலின் காரணமாக இவற்றின் இளம் பூச்சிகள் மற்றும் வண்டுகள் இலையின் அடிப்புறத்திலிருந்து சாற்றை உறிஞ்சும் மேலும் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும். இதனைக்கட்டுப்படுத்த செடியின் உயரத்திற்கேற்ப ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறி அட்டையினை கட்டி விடவும். மேலும் 250 கிராம் பச்சைமிளகாய், 250 கிராம் பூண்டு மற்றும் 100 கிராம் இஞ்சி ஆகியவற்றை நன்கு அரைத்து அதனை மூன்று லிட்டர் தண்ணீரில் நன்கு கலந்து இரவு முழுவதும் ஊறவைத்து கரைசல் தயாரிக்கவும். இந்த கரைசலில் இருந்து 300 மில்லி எடுத்து அதனுடன் 40 கிராம் சூடோமோனாஸ், 20 மில்லி கோழி முட்டையின் வெள்ளைக்கரு இவற்றுடன் 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்க வேண்டும்.

**கால்நடை:**

நிலவும் வெப்பமான சூழ்நிலையில் கால்நடை கொட்டகைகளை முறையாக பராமரித்தல் மிகவும் அவசியமாகும். கொட்டகைகளின் திசையமைப்பு நல்ல காற்று வசதி கிடைக்கும் படியாகவும் அதே நேரத்தில் சூரிய வெப்பம் கால்நடைகளை நேரடியாகத் தாக்காதவாறும் அமைக்க வேண்டும். அதாவது கொட்டகைகளின் நீள வட்டம் கிழக்கு மேற்காக அமைவது நல்லது. வேகமாக காற்று வீசும் இடங்களில் மரங்கள் வளர்த்தால் காற்றின் வேகத்தை ஓரளவு குறைக்க உதவும்.